## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

Sessions Case No.66/2006

Deposition of witness – PW3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செங்கோட்டுவேலு | Caste | : | |
| S/o. | : | தங்கவேல் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 04.11.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused absconded and declared as proclaimed offender on 09.06.2025 and NBW pending from 27/02/2006.

முதல் விசாரணை;

நான் சின்ன சீரகாபாடியில் குடியிருந்து கொண்டு பாதுகாவலராக பணியாற்றி வருகிறேன். சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் சமத்துவபுரத்திற்கு சென்று வாடகை வீட்டில் குடியிருந்து வந்தேன்.

ஒரு நாள் மாலை 6.30 மணி அளவில் நான் வீட்டில் இருந்தேன். அப்போது பரமசிவம் என்ற நபர் கையில் ஒரு இரும்பு பைப்புடன் ஓடி வந்தார். அந்த இரும்பு பைப்பில் ரத்தக்கறை இருந்தது. அவரை பார்த்து

நில்லுடா நில்லுடா என்று சொல்லி அவரை தடுத்து நிறுத்த பார்த்தேன். அவர் பைப்புடன் அங்கிருந்து ஓடிவிட்டார். என்னவென்று தெரியவில்லை, அவர் பைப்புடன் ஓடுகிறாரே என்று நினைத்து நான் பரமசிவத்தின் வீட்டிற்கு சென்று பார்த்தேன். அப்போது வீட்டிற்குள் பரமசிவத்தின் மாமியார் அழுது புலம்பிக்கொண்டிருந்தார். அப்போது அக்கம் பக்கம் இருந்தவர்களும் வந்துவிட்டார்கள். என்ன நடந்தது என்று கேட்டபோது பரமசிவம் தனது மனைவியை அடித்து போட்டுவிட்டு ஓடிவிட்டதாக பரமசிவத்தின் மாமியார் சொன்னார். உள்ளே சென்று பார்த்தபோது பரமசிவத்தின் மனைவி ரத்தக்காயங்களுடன் கீழே கிடந்தார். காவல் ஆய்வாளர் பிரேதத்தை வைத்து விசாரணை செய்தார். நான் நடந்ததை சொன்னேன்.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.